பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L 91
பொருளியல்
திரு. லோகசிங்கம்
கணக்கியல்
திரு. மரியதாஸ்
வர்த்தகம்
திரு. தேவா
அளவையியல்
திரு. விக்கி
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை.

உதயன்

விலை
ரூ2/50

A/L 91
இரசாயனவியல்
By
திரு. சண்
பௌதிகவியல்
திரு. சோதி
தூய/பிரயோக கணிதம்
திரு. வெக்டர்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை.

சுடர்: 4 சுக்கில ஞூ வைகாசி மீ 12 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 19 (25 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-144

★ யாழ். பல்கலைக்கழகத்தில்

பூரணத்துவமான கம்பியூட்டர் நெறி

பிரிட்டிஷ் அரசாங்கம் உதவும்

யாழ்ப்பாணம், மே. 25

யாழ்ப்பாணம் பல்கலைக்சழகத்தில், பூரணத்துவமான மட்டத்தில் கம்பியூட்டர் போதனை நெறி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இதற்கான சகல உதவிகளையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஏற்பாட்டின் பேரில் அந் நாட்டின் காடிவ் பல்கலைக்கழகம் வழங்க உள்ளது.

பிரஸ்தாப பல்கலைக்கழகத்திலிருந்து ஒருவர் கொண்ட தூதுக்குழு ஒன்று இங்கு விஜயம் செய்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கம்பியூட்டர் பாட நெறியை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் கம்பியூட்டர் விஞ்ஞானம் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அது முழு மட்டத்தில், பூரணத்துவம் வாய்ந்த பாடநெறியாகப் போதிக்கப்படவில்லை.

கம்பியூட்டர் விஞ்ஞானக் கல்வியை ஒரு பீடத்தின் பிரிவாக்கி, பின்னர் ஒரு துறையாக்கி கம்பியூட்டர் விஞ்ஞானப் பொறியியலாளர்களை உருவாக்கும் அளவுக்குப் பூரணத்துவம் ஆக்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமான திட்டத்தை அமுல் செய்யும் வகையில், பேச்சுக்களை நடாத்த லண்டன் காடிவ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் அலெக்ஸ்கிறேயின் இங்கு வந்திருந்தார்.

பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவுடன் பேச்சுக்களை செவ்வாய்க்கிழமை நடத்திய பின்னர்

(6-ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் வேலைநிறுத்தம்

விரிவுரைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ், பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கம் நேற்று முதல் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தால் பல்கலைக்கழக விரிவுரைகள் மற்றும் பணிகள் யாவும் ஸ்தம்பித்தன.

அகில இலங்கை பல்கலைக்கழகங்களின் ஊழியர்கள் சம்மேளனம் சம்பள உயர்வு கோரி நேற்று முதல் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளது.

சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் நேற்று வேலைநிறுத்தத்தில் குதித்தது.

ஊழியர்கள், சிற்றூழியர்கள் யாவரும் வேலைநிறுத்தத்தில் குதித்ததால் விரிவுரைகள் நடைபெறவில்லை. மாணவர்கள் வந்து திரும்பிச் சென்றனர். பல்கலைக்கழகச் சுற்றாடல் வெறிச்சோடிக் கிடந்தது.

தமது கோரிக்கை நிறைவேறும்வரை போராட்டம் தொடரும் என்று ஊழியர் சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன. (-3ஒ-10]

மாணவர் ஒன்றியம் ஆதரவு

யாழ்ப்பாணம், மே 25

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தொழிற் சங்கச் சம்மேளனம் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதற்கு ஆதரவாக யாழ்.

(6ஆம் பக்கம் பார்க்க)

மாங்குளத்தில் 27, 28 இல் நகை மீளளிப்பு

யாழ்ப்பாணம், மே 25

மாங்குளம், முல்லைத்தீவு பகுதி மக்களின் அடகு நகைகள் 27ஆம் திகதியும் 28 ஆம் திகதியும் மாங்குளம் மக்கள் வங்கி கிளையில் வைத்து வழங்கப்பட உள்ளன.

மேற்படி வங்கிகளின் அடகு நகைகள் ஏற்கனவே மாங்குளத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பணம் கட்டியவர்களின் நகைகளே தற்பொழுது கொண்டு வரப்பட்டுள்ளன என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன (ஒ-10)

ஜீ. சி. ஈ. பரீட்சை பெறுபேறு தாமதமாகும்?

யாழ்ப்பாணம், மே 25

ஜீ. சி, ஈ. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதில் மேலும் தாமதம் ஏற்படலாம் என கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

பிரஸ்தாப பரீட்சை கடந்த பெப்ரவரியில் நடந்தது. இதற்கான முடிவுகள் விரைவில் வெளிவரலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கமைய பரீட்சைகளின் பெறுபேறுகளும் வெளியிடுவதற்கு தயாரான நிலையில் இருந்தன.

ஆனால் கர்நாடக இசை, நடனம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் இம்மாத இறுதியில் நடத்தப்பட உள்ளதால் இந்த பெறுபேறுகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை வங்கியின் 'சீ - பாங் கார்ட்' முறை யாழ்ப்பாணத்துக்கும் வந்தது

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாண மாவட்டத்திலும் இலங்கை வங்கியின் ''சீ பாங் கார்ட்'' நடைமுறைக்கு வந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 25 பேருக்கு மேற்படி ''கார்ட்'' வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கார்ட் மூலம் ஒருவர் தமக்குத் தேவையான பொருள்களை குறிப்பிட்ட கடைகளில் கொள்வனவு செய்ய முடியும்.

அதற்குரிய பணத்தை 45 நாட்களுக்குள் இலங்கை வங்கியில் செலுத்தவேண்டும்.

ஏற்கனவே தென் பகுதியில் ''சீ பாங் கார்ட்'' முறையால் பலர் நன்மையடைந்து வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10)

முச்சந்தி முரளி



பரீட்சை முடிவுகளும் பின்னுக்குப் போகப் போக, பிள்ளைகளுக்கும் படிக்கிற எண்ணம் பின்னுக்குப் போய்விடும் பாருங்கோ......!

காங்கேசனில் வர்த்தகர் சுட்டுக் கொலை

காங்கேசன்துறை, மே 25

காங்கேசன்துறையில் செவ்வாய்க்கிழமை இரவு 7.30மணியளவில் அப்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் முருகையா என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காங்கேசன்துறை குரு வீதி சந்தியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-68)

கிழக்கு பாதுகாப்பு: ஒழுங்கில் மாற்றம்?

ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் விவரங்கள் வரும்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, மே 25

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்யப்படலாம் என அறியப்படுகிறது.

சம்மாந்துறைக்கு நேற்றுச் சென்ற பாதுகாப்புக் குழுவின் அறிக்கையில் கிழக்கு மாகாணம் முழுவதிலும், பாதுகாப்பு ஒழுங்குகளை மாற்றுவதன் அவசியம் வலியுறுத்தப்படலாம் எனவும் சொல்லப்படுகிறது.

சம்மாந்துறையில் 24 மணி நேரத்தில் சகஜ நிலையை உருவாக்குமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து பொலீஸ் மா அதிபர் திரு. ஏர்னஸ்ட் பெரேரா, இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா ஆகியோர் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவருடன் நேற்று கிழக்குக்கு விஜயம் செய்திருந்தனர்.

அவர்கள் அங்குள்ள இலங்கை, இந்திய இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்கள்.

இதனைத் தொடர்ந்து அறிக்கை ஒன்று இன்று வியாழக்கிழமை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

இப்போது வடக்கைப் போலவே கிழக்கிலும் இந்தியப் படையே பாதுகாபபு ஏற்பாடுகளைச் செய்கிறது.

இனிமேல் இந்திய இராணுவத்தின் அனுசரணையுடன், இலங்கை ஆயுதப்படைகளுக்கும் சில பகுதிகளில் பாதுகாப்புப் பொறுப்பை வழங்க வேண்டும் என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளதாகத் தெரியவந்திருக்கிறது. (அ-1)

சம்மாந்துறை கல்முனையில் ஹர்த்தால்

சம்மாந்துறை, கல்முனை ஆகிய பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் அப்பகுதிகளில் அலுவல்கள் முழு அளவில் பாதிக்கப்பட்டன. (ஒ-21)

நகரில் நடந்த கிரனேட் வீச்சு!

நேற்று இரவு யாழ் நகரப் பகுதியில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இரண்டு கிரனேட் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன என்று அறிய வந்தது.

நேற்று இரவு 7-45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன்.

பிரஸ்தாப சம்பவத்தில் மூன்று அமைதிப்படையினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு யாழ்வைத்திய சாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

சம்மாந்துறையில் சமரச நிலையை உருவாக்கும் முயற்சிகள் தீவிரம்

கொழும்பு, மே. 25

சம்மாந்துறைப் பகுதியில் சமரசத்தையும், அமைதி நிலையையும் உருவாக்கும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வரிசையில் வர்த்தக கப்பல்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் நேற்று சம்மாந்துறையில் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இந்த மாநாட்டில் 10 தமிழர்களும், 10 முஸ்லிம்களும் கொண்ட பிரசைகள் குழுவினரும், அப்பகுதி எம் பிக்களும் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறையில் இன்னும் 12 ஆயிரம் பேர் அகதி முகாம்களில் தங்கி இருக்கின்றனர் என்றும்—

மொத்தம் 35 ஆயிரம் பேர் அகதிகளாக்கப்பட்டனர்' என்றும் தற்போது இவர்களில் பெரும்பாலானோர் தமது வீடுகளுக்குத் திரும்பி விட்டனர் என்றும் - மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர்.எம். மன்சூருடன் இராணுவத் தளபதி, பொலீஸ் மா அதிபர் ஆகியோரும், இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரி ஒருவரும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நிலைமை சீராகும் வரை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரியில் கடைகளைமூட உத்தரவு

சாவகச்சேரி, மே 25

சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள கடைகள் நேற்று மூடப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) இப்பகுதியில் ஹர்த்தால் காரணமாக கடைகள் திறக்கப்படவில்லை என்பது தெரிந்ததே.

அதை அடுத்தே நேற்றும் கடைகள் மூடப்பட்டதாக அறிய வருகிறது.

நேற்று புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை கடைகள் திறக்கப்படக்கூடாதென

(6-ஆம் பக்கம் பார்க்க)

அதிகாரப் பரவலில் உள்ள தாமதத்தை நீக்கத் தீர்மானம்

ஜனாதிபதி-முதலமைச்சர் சந்திப்பில்

கொழும்பு, மே 25

அதிகாரங்களைப் பரவலாக்குவதைத் தாமதம் அடையச் செய்யும் விஷயங்களை, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு நீக்கவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கும், வடக்கு—கிழக்கு மாகாண சபை முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதிபதியின் அழைப்பின்பேரில், திரு. வரதராஜப்பெருமாள் நேற்று அவரைச் சந்தித்துப் பேசினார். சந்திப்பு ஜனாதிபதியின் செயலகத்தில் இடம்பெற்றது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபை அமைச்சர் யு. பி. விஜேக்கூன், வெளியுறவு அமைச்சரும், பாதுகாப்புத்துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின ஆகியோரும் அச்சமயம் சமூகமளித்திருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில், சம்மாந்துறையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஜனாதிபதி கவலைதெரிவித்தார்.

முதலமைச்சர் பதிலளிக்கையில் —

கிழக்கு மாகாணத்தில் முக்கியமாகச்சம்மாந்துறைப்பகுதியில் நிலைமையை வழமைக்குக் கொண்டுவர மேற்கொள்ளப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
25 — 05 — 1989
வைகாசி — 12
வியாழக்கிழமை
சுபநேரம்!
07. 22 முதல் 08. 52 வரை
ராகுகாலம்!
01.22 முதல் 02.52 வரை

மாகாணசபை திருத்தசட்டம்: மீண்டும் இன்று விவாதம்

கொழும்பு, மே 25

மாகாணசபைகள் (பின்விளைவுகள்) சட்டத்திருத்தம் மீண்டும் இன்று (வியாழன்) நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னர் இச்சட்டம் விவாதிக்கப்பட்டது.

கடைசியாக ஐக்கிய சோஷலிச முன்னணி எம். பி. திரு அத்தாவுட செனவிரத்தின பேசிக்கொண்டிருந்தபோது, சுதந்திரக்கட்சி எம்பிக்கள் குறுக்கிட்டுப்பேசவே நாடாளுமன்றத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து உப சபாநாயகர் காமினி பொன்சேகா குழப்பம் விளைவித்த மூன்று எம்பிக்களை வெளியேற்றினார் அத்துடன் சட்டதிருத்தம் மீதான விவாதத்தை இன்று வரை ஒத்திவைத்தார். (ஒ எ)

இன்று ஹர்த்தாலுக்கு ஜே. வி. பி. அழைப்பு!

கொழும்பு, மே 25

இன்று வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் இன்று மீண்டும் விவாதத்துக்கு வரும் மாகாணசபை (பின் விளைவுகள்) சட்டத்திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே இந்த ஹர்த்தாலுக்கு ஜே. வி. பி. அழைப்பு விட்டிருப்பதாக கொழும்புச் செய்தி தெரிவிக்கிறது.

மாகாணசபை நிர்வாகத்துக்கு இச்சட்டத் திருத்தம் நிறைவேற்று அதிகாரங்களை வழங்குவதாக சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே. வி. பி. ஆகியன எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பூரண விளைத்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. Country of Origin Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் [571]

கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு 24 25, 26ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ. 3. 50. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்துக்கு அண்மையில்] [569]

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் 30. 05. 89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [570]

கோழிக்குஞ்சு விநியோகம்

பிறவுண் சேவற்குஞ்சுகள் 100க்கு மேல் விலை 3/50, 250க்கு மேல் விலை 3/00, முழுப் பணமும் முன்கூட்டியே செலுத்தி பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். [350]

தூய இன Golden Comet பேட்டுக்குஞ்சு, Christhombu, புறயிலர் குஞ்சுகள் 28- 05-89 இல் விநியோகிக்கப்படும். தடுப்பூசிஏற்றப்பட்ட Golden Comet, பேட்டுக்குஞ்சுகளைப் பதிவு செய்து இரண்டுகிழமைகளில் விநியோகிப்போம். கால்நடைவளர்ப்போர்சங்கம் சுன்னாகம் கிளை (பயிர்செய்கை உத்தியோகத்தர் அலுவலகம்) K.K.S. வீதி, சுன்னாகம். (11043)

சமூககல்வி

ஆண்டு9 சமூகக்கல்வி வெளிவந்துவிட்டது. 710 வினாக்களையும் விடைகளையும் கொண்ட ஆண்டு 9றகான வினாவிடை ஆக்கம்: க. சந்திரசேகரம் கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [563]

NEW CITY TRADERS

Daytron T. V 12'', 14'' B & W 14'', 20'' கலர் Phillips 20'' Gas cooker, Hotplate, Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர் ஓடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll சுவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [சி/2505]

Employment Wanted

Retired Clerk aged 42 with good knowledge of English, Tamil, Sinhala and Accounts seeks employment please: Write 53, Sangarapillai Road, Manipay. (578)

பிறந்தநாள் வாழ்த்து

செல்வி
ப. கவிதாயினி

வண்ணார்பண்ணை மேற்கு, நாவலடி ஒழுங்கை பரமலிங்கம் - தேவி தம்பதிகளின் புதல்வி கவிதாயினி இன்று 25. 5. 89 தனது 12 ஆவது பிறந்தநாளை நினைவு கூருகிறார்.

அவரை அப்பா, அம்மா, தம்பி சுதாகரன் உற்றார் உறவினர்கள் சீரும், சிறப்புடனும் வளர வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள்.

(சி/2656)

மணமகன் தேவை

யாழ். இந்து தட்சகுலத்தைச் சேர்ந்த 35 வயது நிரம்பிய பெண்ணுக்கு அதேகுலத்தைச் சேர்ந்த மணமகனை எதிர்பார்க்கின்றார்கள். சொந்தத் தொழில் செய்பவர் விரும்பத்தக்கது. சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு: ABCDE 328, நாவலர் வீதி, ஆனைப் பந்தி. 9 மணியில் இருந்து 12. 30 மணிவரை காரியாலயம் திறந்திருக்கும். (577)

மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய U. S. A. ஹோட்டல் மனேஜ்மன்ற் செய்த மணமகனுக்கு 63 ஆம் ஆண்டிற்குப் பின் பிறந்த படித்த அழகிய பெண் தேவை. சீதனம் கவனிக்கப்படமாட்டா. தொடர்பு: 'A B C D E' 328 நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (576)

துர்நாற்றம்

முல்லைத்தீவு, மே 25

முல்லைத்தீவுச் சந்தைக்கு அருகாமையில் உள்ள பழைய பஸ் நிலையக்காணிக்கும் ஞானவைரவர் கோயிலுக்கும் இடையில் உள்ள காணியில் குப்பை கூளங்கள் போடப்படுவதால் துர்நாற்றம் வீசுகின்றது. (சு-92)

குரங்குகள் படையெடுப்பு

முல்லைத்தீவு மே 25

முல்லைத்தீவு பட்டண எல்லையைச் சேர்ந்த கரைவீதி, வண்ணான் குளம், கரைச்சிக் குடியிருப்புஆகிய பகுதிகளில் குரங்குகள் படை எடுத்து வருகின்றன,

அவை தினமும் வந்து வாழைக்குலைகள் முருக்கங்காய்கள் மற்றும் உபஉணவுப் பயிர்கள் ஆகியவற்றை நாசமாக்குகின்றன. (சு-92)

ஊர்காவற்றுறை - காரைநகரை இணைக்க தாம்போதி அமைக்குக

வரியிறுப்பாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 25

''ஊர்காவற்றுறை காரை நகர்கடல் பகுதியை இணைக்க தாம்போதி அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி வடக்கு கிழக்கு மாகாணசபை முதல்வரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஊர்காவற்றுறை பட்டின வரியிறுப்பாளர் சங்கப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

அக் கூட்டத்தில் மற்றும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன,

அவை வருமாறு:-

★ ஊர்காவற்றுறை பட்டின இரண்டாவது தண்ணீர் திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்யும்படி நீர் வழங்கல்வடிகால் சபையைத் தூண்டுதல்.

★ பட்டினத்தின் ஐந்து வட்டாரங்களிலும் உள்ள வீதிகள் மோசமாகப் பழுதடைந்துள்ளதால் அவைகளை உடனடியாகத் திருத்தும்படி விஷேட ஆணையாளரை வேண்டுதல்.

★ தற்பொழுது விநியோகிக்கப்படும் குழாய்நீர் உவர்த்தன்மையாக இருப்பதாலும் போதிய அளவு தண்ணீர் மக்களுக்குக் கிடைக்காதாலும் ஐ. நா. ஸ்தானிகராலயத்தால் ஊர்காவற்றுறை பட்டின பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட டிராக்ரரைப் பயன் படுத்தி சாட்டியிலிருந்து நல்ல தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி விஷேட ஆணையாளரைக் கேட்டுக்கொள்வது.

★ இரவில் சில பகுதிகளில் மின் வலு குறைவாக உள்ளதால் மின் குமிழ்கள் மங்கலாக உள்ளன. இதனால் மாணவர்கள் தமது பாடங்களைத் தயார் செய்ய முடியாமல் கஷ்டமுறுகின்றனர். ஆகவே புதிதாக மேலதிக மின்மானி ஒன்றைப் பிறிதொரு இடத்தில் அமைக்கும்படி விஷேட ஆணையாளரைக் கோருவது.

(இ-ச)

அனலைதீவில் பற் சிகிச்சைக் கருத்தரங்கு

அனலைதீவு மே 25

பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் பல் வருத்தங்களைத் தடுத்து அவற்றிற்குச் சிகிச்சை அளித்தல் சம்பந்தமான சுகாதாரக்கருத்தரங்குஒன்று அனலைதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கில் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள், வேலணை பாடசாலை பற் சிகிச்சையாளர் ஊர்காவற்றுறை சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பற் சிகிச்சையாளர் திருமதி கனகரெத்தினம் தமது உரையில் பல் வியாதிகள் ஏற்படுவது பற்றியும் அவற்றைத் தடுப்பது பற்றியும் கூறினார்.

ஊர்காவற்றுறை சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் திரு. ஏ. செல்லையா தமது உரையில், பற்களை பிடுங்குவதிலும் பார்க்க பாதுகாக்க வேண்டும் என்றார். (இ-18)

மலையகப் பாடசாலை ஆசிரியர் நியமனம் இன்னும் இழுபறியில்

நுவரெலியா, மே 25

தோட்டப் பாடசாலைகளுக்கு 1000 ஆசிரியர்களைத் தெரிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சகல மாவட்டங்களையும் சேர்ந்தவர்கள் பங்குபற்றினார்கள். ஆசிரியர் நியமன போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது அகில இலங்கை ரீதியில் கோரப்பட்டதால் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பித்தனர். போட்டிப் பரீட்சையில்தேறியவர்களுக்கு இப்பொழுது நுவரெலியா, கண்டி, மாத்தளை மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சை நடைபெறுகிறது.

மலையகத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் வடக்கு- கிழக்குப் பகுதி இளைஞர்களுக்கு மலையகப் பாடசாலைகளில் நியமனம் வழங்கக்கூடாதென்று ஒரு போராட்டத்தைத் தொடங்கியிருக்கின்றனர். இதற்கு ஆதரவாகச் சிலர் இருக்கின்றனர் மத்திய மாகாண சபையிலும் இந்தப் பிரச்சினையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள், இவர்கள் மலையக பாடசாலைகளுக்குதோட்ட இளைஞர்களையே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் மலையக இளைஞர்களுக்கு 80 சதவீத இடம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர். (க-58)

GUINNESS TRAVELS

கின்னஸ் ரவல்ஸ் வழங்கும்

விசாவுடன் பிரயாண ஒழுங்கு,

- ✶ ENGLAND - 2 ஆண்கள்
- ✶ CANADA - 1 பெண் - 3 ஆண் குழந்தைகள்
- ✶ WEST GERMANY - 1 பெண் - 3 ஆண்குழந்தைகள்
- ✶ WEST GERMANY - 16 வயது திட்டத்தில் போக விரும்புவோர்

தாமதியாது எமது கொழும்பு விலாசத்துடன் சனிக்கிழமை 27. 5. 89 தொடர்பு கொள்ளவும்.

400, K. CYRIL C. PERERA MAWATHA,
(புழுமெண்டல் றேட்)
கொழும்பு - 13
(ரெலிபோன் - 546077, 25933, 29182.)

(தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளலாம்)

(11047)

Professional Exams

		Commencement
C. I. M. A.	Stage 1	3 - 6 - 89
	Stage 2	10 - 6 - 89
I. D. P. M.	Part 1	3 - 6 - 89
	Part 2	17 - 6 - 89
A. A. T. (Sri Lanka)	Stage 1	3 - 6 - 89
BOOK-KEEPING	(Pitmans)	5 - 6 - 89
COMPUTER	(Basic)	27 - 5 - 89

An Electronic Calculator will be Issued FREE for CIMA & IDPM Students

Panel of Lecturers include:
JEYARATNAM, KAILAYAPILLAI,
KATHIRGAMANATHAN, NAVARENDRAN,
PUSHPA, SIVAPATHASUNDARAM.
& CAMPUS LECTURERS

NOTE; I. D. P. M. & I. A. B. Exams will be held in Jaffna Centre

- ★ Qualified, Experienced & dedicated Panel of Lecturers
- ★ Free Cyclostyled Notes
- ★ Moderate Fees
- ★ Registration with London Institutes will be handled by us

Pay only Rs 100/- on admission, Satisfy yourself about our standard of lectures and pay the balance fees later

SCHOOL OF BUSINESS ADMINISTRATION,
(Pioneers in Accountancy Studies)
16, 3rd CROSS STREET,
(Near O. L. R. Church)
JAFFNA

[சி/2628]

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் ந. நிஷாந்த்

தற்போது இங்கிலாந்தில் வசிக்கும் டாக்டர் நவநீதராசா - நிராஞ்சனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிஷாந்த் தனது முதலாவது பிறந்தநாளை இன்று [25-05 1989] டிரான்ஸ்கியில் அம்மப்பா குடும்பத்தினருடன் குதூகலமாய் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா. அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், மாமா, மாமி, அன்ரிமார் மற்றும் நவிண்டில் உற்றார், உறவினர் ஏனைய நண்பர்கள் யாவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் இறைவன் அருளால் வாழ்கவென இறைஞ்சி வாழ்த்துகின்றனர்,

''கலைநடம்''
கல்வத்தை,
கரவெட்டி.

S. K. நடராசா,
குடும்பத்தினர்.

(498)

கண்ணீர் அஞ்சலி

மலர்வு:
26- 2- 1968

உதிர்வு:
22 5- 1989

செல்வன்
ம கனகரட்ணம் ஸ்ரீகாந்தன்
(பக்பக்)

உனது குடும்ப வறுமையைவிட மக்களின் வறுமையை நேசித்தவனே!
உனது மரணம் என்றும் எம்மனதில் நினைவலைகளாக நிற்கும்!

- நண்பர்கள்.

சாவகச்சேரி, கல்வயல். (11048)

---

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
15 - 12 - 1917

உதிர்வு:
25 - 5 - 1987

திதி: 01 - 06 - 1989

தொல்புரம்
திருமதி பாக்கியம் கந்தையா

மற்றும் ஓர் ஆண்டு
மறைந்தாலும் உன் நினைவு
சற்றும் குறையாது
சணப் பொழுதும் மறையாது
உற்றவொரு துணை நீ
உம்பருல செய்திடினும்
பெற்ற உனைமறவோம்
பெரும்பேறே பாக்கியமே!

''பரிமளவாசம்''.
தொல்புரம், சுழிபுரம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

வறுமை நிலையில் உள்ள குருமாருக்கு உதவ கூட்டு நிதி நிறுவனம்

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவைக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 25

ஆலய முகாமையாளர்களை அழைத்து மாநாடு நடத்தி வறுமை நிலையில் வாடும் ஆலய குருமார்களுக்கு உதவ கூட்டு நிதி நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இப்படியான முடிவு ஒன்றை எடுத்துள்ளது அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை.

மூன்று நாட்களாக நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்று இறுதி நாள் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு;

★ இந்துக்கள் யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய பகுதிகளுக்கு யாத்திரை செல்லும்போது வை. எம். சி. ஏ. அமைப்பின் கட்டடங்களில் தங்கவேண்டியுள்ளது. இந்துக்கள் தங்க இந்து கலாசார நிலையம் முதலில் யாழ்ப்பாணத்தில் அமைய வேண்டும்.

★ சகல இந்து மத அமைப்புக்களையும் இணைத்துஅமைப்பு உருவாக்க வேண்டும்;

★ மத மாற்றத்தை தடுக்கத்தக்க பூசகர்களை ஆலயத்தில் உருவாக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் குரு பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும். அதில் தேறியவர்களே ஆலயங்களில் பூசை செய்ய அனுமதிக்க வேண்டும்.

★ செல்வம் மிக்க ஆலயங்களின் நிதிவளம் செல்வம் குன்றிய ஆலயங்களுக்கு பயன்படுத்த வேண்டும்.

★ கோயில் நிகழ்ச்சிகள் இரவு 10 மணிக்கு மேல் நீடிக்கக்கூடாது.

★ கோயில்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதை தவிர்க்க வேண்டும்.

★ காங்கேசன்துறையில் இருந்து பொத்துவில் வரை இலங்கை போக்குவரத்துச் சபையால் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் அனுசரணையுடன் நாளாந்தம் இரண்டு படகுச் சேவைகள் நடத்தப்பட வேண்டும். அத்துடன் காங்கேசன்துறையில் இருந்து பொத்துவில் வரை கரையோரப் பாதை அமைக்க வேண்டும். (இ-3)

மதிய உணவு வழங்குவதில் இப்படியும் ஒரு நடைமுறை!

கொழும்பு, மே. 25

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதில் மொரட்டுவையில் உள்ள ஒரு பாடசாலை புதிய முறை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

பெற்றோரே மதிய உணவை மாணவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அந்த மதிய உணவு அரசு குறிப்பிட்ட தரத்துக்கு ஏற்றதாக இருக்கிறதா என்பதைக் கண்காணிக்க பாடசாலை நிர்வாகம் ஒரு பெற்றோரை நியமிக்கும். பிள்ளைக்கு மதிய உணவு வழங்கியதற்காக பிள்ளையின் பெற்றோருக்கு பாடசாலை நிர்வாகம் தினம் 3 ரூபாய்ப்படி மாதம் முடிவில் பணத்தை வழங்கும்.

இந்தத் திட்டத்தை மொரட்டுவையில் உள்ள பிரின்சஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் அபிவிருத்திச் சபை அறிமுகப்படுத்தி உள்ளது. (இ-எ)

மட்டக்களப்பு கொழும்பு ரயில் சேவை

கொழும்பு மே 25

மட்டக்களப்பு கொழும்பு ரயில் சேவை அடுத்த மாத ஆரம்பத்தில் இருந்து சீராகும் என்று ரயில்வேத்திணைக்கள அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

தற்போது கிழமைக்கு இரண்டு தடவையே கொழும்பு மட்டக்களப்பு ரயில் சேவை நடைபெறுகிறது. (இ-எ)

தமிழகத்திலிருந்து வரும் 3 சஞ்சிகைகளுக்குத் தடை

யாழ்ப்பாணம், மே 25

தமிழகத்தில் இருந்துவெளிவரும் சஞ்சிகையில் மூன்று சஞ்சிகைகளைவடக்கு-கிழக்கில் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே இத்தடையை விதித்துள்ளதாக அறியப்படுகிறது.

தமிழகத்திலிருந்து வெளிவரும் பிரஸ்தாப சஞ்சிகைகள் மூன்றையும் விற்க வேண்டாம் என்று புத்தக வியாபாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமுதம், கல்கி, துக்ளக் ஆகியவையே இந்த மூன்று சஞ்சிகைகளும் ஆகும். (இ-9)

முஹம்மதலி ஓய்வு

கொழும்பு. மே 25

மாலைதீவுக்கான இலங்கைத் தூதர் ஜனாப். எம். இ. எச். முஹம்மதலி இம் மாத இறுதியில் ஓய்வு பெறுகிறார்.

பழம் பெரும் அரசியல்வாதியான ஜனாப் முஹம்மதலி மூதூர்த் தொகுதி எம்பியாக பணியாற்றியிருந்தார்.

1986 இல் அவர் தூதராக நியமனம் பெற்றார். மீண்டும் அரசியலில் பிரவேசிக்கும் எண்ணம் இல்லை என்று அவர் தெரிவித்தார். (இ-எ)

வெசாக்குக்கு செலவிட இருந்த ரூ.50 ஆயிரம் மாணவர் நலனுக்கு

கொழும்பு மே 25

''எலிபன்ற் ஹவுஸ்', நிறுவனத்தினால் வெசாக் பண்டிகைக்குச் செலவு செய்யப்படவிருந்த 50ஆயிரம் ரூபாவும் பல்கலைக்கழக மாணவர்களின் நலன்களுக்காகச் செலவிடப்படும்.

இந் நன்கொடைப் பணத்தைக் குறிப்பாகக் கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் சட்ட ஆலோசனை பெறுவதற்காகப் பயன் படுத்தும்படி ''எலிபன்ற் ஹவுஸ்' நிறுவனம் கேட்டுள்ளது.

இத்தொகையைக் கொண்ட காசோலை ஒன்றை புடைவை, கிராம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு.எஸ் தொண்டமான் பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிஒருவருக்கு அண்மையில் கையளித்தார்.

அமைச்சர் தொண்டமான் இக் காசோலையை வழங்குகையில் ''இந்தப் பணத்தை இக் கம்பனி வெசாக் பண்டிகையின் போது மின் ஒளி அலங்காரத்துக்குச் செலவு செய்து இருக்கும். ஆனால் இக் கம்பனியின் வெசாக் பண்டிகைக் குழு இப் பணத்தைப் பல்கலைக்கழக மாணவர்களின் சேம நிதிக்குச் செலவு செய்யத் தீர்மானித்தது. இது மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமையட்டும்'' என்றார். (இ-ச)

பிரிவு உபசாரம்

புங்குடுதீவு மே 25

புங்குடுதீவு ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கடந்த மூன்று வருடங்காளகக்கடமை ஆற்றி மாற்றலாகிச் செல்லும் ஆசிரியை திருமதி எம். எம். ஏ பெர்னாண்டோவுக்கு ''பிரிவு உபசார விழா' மேற்படி வித்தியாலய அதிபர் திரு; அ. வியோன்சியஸ் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலைஅபிவிருத்திச்சங்க செயலாளர் திருமதி லூர்து ஞானரெத்தினம், ஆசிரியை திருமதி. யூ. செபராஜேஸ்வரி வானொலி அறிவிப்பாளர் திரு. வி. அன்ரனிஸ்ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள்.

ஆசிரியர் திரு. இ. கருணாகரன், ஆசிரியை செல்வி ஹேமலதா, ஆசிரியை செல்வி மி.அருட்பிரகாசம் ஆகியோர் பாடல்கள் மூலம் பாராட்டினர்கள்.

கலைநிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன இறுதியில் மாற்றலாகிச் செல்லும் ஆசிரியை நன்றி உரையாற்றினார். (க-131]

யாழ் மாவட்டத்தில் வறுமை ஒழிப்புத்திட்ட கடன் வழங்கும் நடவடிக்கைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், மே 25

ஜனசவிய திட்டத்தின் கீழ் இலங்கை வங்கி ஊடாக வழங்கப்படும் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கான கடன் வழங்கும் நடவடிக்கைகளை யாழ் பிராந்திய இலங்கைவங்கி தீவிரப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க யாழ் மாவட்டத்தின் சனசமூக நிலையங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்வந்துள்ளன.

இவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவதற்கு விண்ணப்பித்த 15 சமூக அமைப்புக்களில் நான்கு அமைப்புக்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த அமைப்புகள் ஊடாக விண்ணப்பித்து சிபார்சு செய்யப்படுவோருக்கே இலங்கை வங்கி கடனை வழங்கும்.

கடன் பெற்றவர் அதனை எப்படி உபயோகப் படுத்துகிறார் என்பதை மேற்படி அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் மேற்பார்வை செய்வர்.

அடுத்த மாத முற்பகுதியில் இக் கடனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி உயரதிகாரி தெரிவித்தார். (இ-10)

மாணவர் ஒன்றியத் தேர்தல்

யாழ்ப்பாணம், மே 25

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் அடுத்த வாரம் நடைபெறவிருக்கிறது.

ஒன்றியத்தின் தலைவர், உறுப்பினர்களைத் தெரிவதற்காகவே இத்தேர்தல் நடைபெறுகிறது. (ஒ-3)

ஓடிய லொறியில் இருந்து மாயமாய் மறைந்த பொருள்கள்

இப்படியும் ஒரு புகார்

யாழ்ப்பாணம், மே 25

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான லொறியில், கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட பொருள்களில் சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் காணவில்லை என யாழ் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

மேற்படி லொறியில் கடந்த 17 ஆம் திகதி கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை ஏற்றி வந்ததாகவும்-

புத்தளத்துக்கு அண்மையில் பாலாவி என்ற இடத்தில் லொறியை நிறுத்திப் பார்த்த பொழுது மேற்படி பொருள்கள் காணமற்போனது தெரிய வந்ததாகவும் அதன் சாரதி தெரிவித்துள்ளார். [ஒ-10]

வரட்சி நிவாரண முத்திரை

கிளிநொச்சி மே 25

கிளிநொச்சி மாவட்டத்தில் 15, 000 குடும்பங்களுக்கு வரட்சி நிவாரண முத்திரைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன.

கிளிநொச்சியில் மொத்தம் உள்ள 21, 850 குடும்பங்களில் அரச ஊழியர்கள், பெரும் கமக்காரர் சமயா சமய ஊழியர்கள், உழவு இயந்திர உரிமையாளர்கள் போன்றவர்களைத்தவிர்த்து 15, 000 குடும்பங்களுக்கு வரட்சி முத்திரைகள் கொடுக்கப்பட உள்ளன. (க- 76)

தீவுப் பகுதியில் பற்சிகிச்சை

அனலைதீவு, எழுவைதீவு மாணவர்களுக்கு 15ஆம்திகதி தொடக்கம் 20ஆம்திகதிவரை பற்சிகிச்சை நிலையங்கள் மூலம் பற்சிகிச்சை அளிக்கப்பட்டது 300க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதற்கான ஒழுங்குகளை ஊர்காவற்றுறை சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்டிருந்தார். (இ- 18)

புதுக்குடியிருப்புக்கு இரு மாடிக் கட்டடம்

கல்விப் பணிப்பாளர் தகவல்

புதுக்குடியிருப்பு, மே. 25

''நீண்ட காலத் திட்டங்களை அடிப்படையாக வைத்தே எதிர் காலத்தில் கட்டடங்கள் அமைக்கப்படும். நாம் மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்தி வேலைகளும் எதிர் காலத் தேவைகளை கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும். முப்பது ஏக்கர் நிலப்பரப்பில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் அமைய இருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுஉரையாற்றும்போது முல்லைத்தீவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். எஸ். மனோகரன் மேற் கண்டவாறு கூறினார்.

விளையாட்டுப் போட்டிக்கு வித்தியாலய அதிபர் திரு. கா. நாகரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. மனோகரன் தமது உரையில் மேலும் கூறியதாவது ''புதுக்குடியிருப்பு மாணவர்கள் கல்வி கற்பதற்கு வகுப்பறைகள் இன்றி மர நிழல்களில் அமர்ந்திருந்து கல்வி கற்பதை நான் அறிவேன். இந்நிலையிலும் அவர்கள் தமது படிப்பில் காட்டி வரும் அக்கறையைப் பரீட்சைப் பெறுபேறுகள் நன்கு வெளிப்படுத்துகின்றன.

அடர்ந்த காடாக இருந்த இந்த இடத்தை மிகக் குறுகிய காலத்தில் ஒரு விளையாட்டு மைதானமாக்கியதில் இருந்து பெற்றோர்கள் [illegible] பிள்ளைகளின் கல்வியில் எவ் [illegible] யவர்களாய் உள்ளனர் என்பது புலனாகின்றது.

விளையாட்டு மைதானத்தை அண்டிய காட்டுப் பகுதிகள் யாவும் விஸ்தரிக்கப்பட வேண்டும். இதற்கான உதவிகளை இக் காணிச் சொந்தக்காரரிடம் இருந்து எதிர் பார்க்கிறேன்.

இப்படி அவர் கூறினார்

மகா வித்தியாலய அதிபர் திரு. நாகரத்தினம் தமது உரையில் கூறியதாவது:

''கடந்த இரு ஆண்டுகளாக நாம் வேதனையின் மத்தியிலேயே வாழ்ந்து வருகிறோம். எமது சிறார்கள் மரநிழல்களிலும் கொட்டில்களிலும் இருந்து கல்வி பயிலுகின்றனர். அவர்கள் தமது அப்பியாசக் கொப்பிகளை வைத்து எழுதுவதற்கு மேசைகள் இல்லை. அமர்வதற்கு வாங்கு, கதிரைகள் இல்லை. விஞ்ஞானத்தில் செய்முறைப் பயிற்சிகளை நடத்துவதற்கு ஆய்வு கூடம் இல்லை.

இக்குறைபாடுகளைக் கல்விப் பணிப்பாளர் மனதில் கொண்டு எமது குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்படி வேண்டுகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

விளையாட்டுப் போட்டியில் வள்ளுவர் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது. (ச - 126)

விற்பனை நிலையம்

சுழிபுரம், மே 25

சுழிபுரம் காட்டுப்புலப் பகுதி மக்களுக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்த ஓர் விற்பனை நிலையத்தை திறந்து வைக்க, வேண்டிய ஏற்பாடுகளை சுழிபுரம் சுகாதார அபிவிருத்திச் சங்கத்தினர் கவனித்து வருகின்றனர். (க-28)

அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபை

சாவகச்சேரி பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் (பிரிவு - 268) 01- 01- 1989ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளது.

ஆகவே இப்பிரதேச சபை எல்லைக்குள் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு, பழைய கட்டடங்களைத் திருத்துவதற்கு, எல்லைச்சுவர்களை அமைப்பதற்கு அல்லது புதிய பாதைகளைத் திறப்பதற்கு இப்பிரதேச சபையின் முன் அங்கிகாரம் பெற்றுச் செயற்படுதல் வேண்டும்.

இது சம்பந்தமான விபரங்களை இப்பிரதேச சபையின் தலைமைப் பணிமனையிலோ அல்லது உப- பணிமனைகளிலோ அலுவலக வேலை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

— பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்

சாவகச்சேரி பிரதேச சபை
கொடிகாமம்.
09. 05. 1989

(சி/2655)

✯ COMPUTER PROGRAMING IN d BASE IV (LATEST VERSION)
பயிற்சிக் காலம்: 2 மாதம்
ஆரம்பம்: 5 - 6 - 89 [சனி, ஞாயிறு வகுப்புகள்]
✯ Lotus 1-2-3 ✯ Word Processing
பயிற்சிக் காலம்: 1 1/2 மாதம்
ஆரம்பம்: 7 - 6 - 89 [செவ்வாய், வியாழன்]
சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-மாத்திரம்.
O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சிமுடிவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்ய வும்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 04 - 06 - 1989

UNIKCO
COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)
(சி/[illegible])

இதோ!
ஷெரமி
வியர்க்குரு பவுடர்

ஷெரமி வியர்க்குரு பவுடர், வியர்க்குரு சரும அரிப்புகளால் சங்கடப்படும் போது இதமான, மென்மையான நிவாரணம் தருவதற்கென்றே விசேஷமாக உருவாக்கப்பட்ட மருந்தூட்டிய பவுடர்.

ஷெரமி வியர்க்குரு பவுடர், பிஞ்சுக் குழந்தையின் பஞ்சு மேனிக்கும் பாவிக்க ஏற்ற மென்மை வாய்ந்தது.

ஷெரமி
வியர்க்குரு பவுடர் —
சரும அரிப்புகளுக்கு சுக நிவாரணம்

Cheramy
PRICKLY HEAT POWDER
Gentle skin
100 கிராம
ரூ. 14/50

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
05-02-1947
மறைவு:
25-05-1987

செல்லத்துரை இராசகுமாரன்

(வவி)
(மில் உரிமையாளர்)

சுதுமலை அம்மன் கோயிலில் சுறுசுறுப்பாய் விழா நடக்கையிலே பலியாகி இரையாகிய குணக்குன்றே! கோமகனே நீ எம்மைப் பிரிந்து ஈராண்டுகள் ஆயினவே! உனைப்பிரிந்து உனை நினைந்து வாழுகின்றோம் உயிர் தரித்து.

அஞ்சலி செய்யும்
குடும்பத்தினர்.

சுதுமலை தெற்கு.

(666)

ஈராண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
05. 08. 1954
மறைவு:
25. 05. 1987
திதி:
01. 06. 989

திரு சுப்பர் மகாலிங்கம்

இன்னல்கள் நிறைந்த ஈராண்டு!
இதயங்கள் வெதும்பிய ஈராண்டு!
இறைவனணைப்பின் ஈராண்டில்

உம்மை நினைவு கூரும்:
மனைவி, மகள், மகள்,
தாய், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள். மைத்துனிகள்,
மருமக்கள், பெருமக்கள்,

10, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(11039)

31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி பத்மினி பாலச்சந்திரன்

தோற்றம்: 15 01 1953
மறைவு: 25-04-1989

எம்மை ஆருந்துயரில் ஆழ்த்திவிட்டு ஒரு கணத்தில் அணைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே! இந்நாளில் அல்ல எந்நாளுமே உங்களை மறவோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 25 05 1989 எமது வீட்டில் நடைபெறும் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் வாடும்
அன்புக்கணவர், பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மாமா, மாமி, உற்றார், உறவினர்கள்.

44, இராஜவீதி,
அச்சுவேலி.

[11044]

இலங்கை ஆசிரியர்களுக்கு மாலைதீவில் இடம்

கொழும்பு, மே. 25

மாலைதீவு அரசு இலங்கையில் இருந்து ஆசிரியர்களை நியமிக்க இருக்கிறது.

மாலைதீவு கல்வி அமைச்சு கொழும்பில் உள்ள மாலைதீவு தூதரகம் ஊடாக ஆசிரியர் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆங்கிலம், கலை, விஞ்ஞானம் மற்றும் ஆரம்பப்பள்ளி ஆகிய துறைகளுக்கான ஆசிரியர்களுக்கே நியமனம் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் ஆசிரியருக்கு இலங்கை கல்வி அமைச்சு 2 வருட சம்பள மற்ற விடுமுறை வழங்கும்.

தற்சமயம் மாலைதீவுவில் அரசு மற்றும் தனியார் பாடசாலைகளில் 750க்கு அதிகமான இலங்கை ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

(ஒ-எ)

தொண்டர் பயிற்சி

சுழிபுரம் மே 25

சுழிபுரம் காட்டுப்புலப், பகுதியில் பரவியுள்ள தொழுநோயாளருக்கு வைத்திய வசதிகளை உதவும் நோக்குடன் சுகாதாரப்பகுதியினர் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமை ஆகிய இருதினங்களிலும் தொண்டர் பயிற்சி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்பில் பங்கு கொண்டு விரிவுரை செய்ய வரும் வைத்திய அதிகாரிகளுக்கும், தொண்டர்களுக்கும் உணவு வகைகள் சிற்றுண்டி உபசரணைகளை சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினர் வழங்கவுள்ளனர்.

இப் பயிற்சி சுழிபுரம் காட்டுப்புலம் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (க-28)

பல்கலைக்கழக அணி வெற்றி

யாழ்ப்பாணம், மே 25

கிறுஸ் கொப்பர்ஸ் அணிக்கும் யாழ் பல்கலைக் கழக அணிக்கும் இடையிலான 30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட சிநேக பூர்வமான கிரிக்கெட்போட்டி அண்மையில் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் பல்கலைக்கழக அணி வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறுஸ்கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப்பெற்றது.

கிருபா 25 சீராளன் 22, செல்வராஜா 14, சிறீதரன் 11, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் அகஸ்டின் 3 விக்கெட்டுக்களையும் எஸ். ஏ. கிளஸ்ரன் கே. அகிலன் ஆகியோர் தாலா 2 விக்கெட்டுக்களையும் எம். பரமலிங்கம் 1 விக்கொட்டையும்வீழ்த்தினர்

பின்னர் ஆடிய பல்கலைக் கழக' அணி 23 ஓவர்களில் 4விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.

எம். பரமலிங்கம் 35, முரளிதரன் 24, கணேசநாதன் 13 எஸ்.ஏ.கிளஸ்ரன் ஆட்டமிழக்காமல் 25, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பொன்விலியஸ் 2 விக்கெட்டுக்களையும் செல்வராஜா, சிறிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். [க - 6]

விளையாட்டால் மன அடக்கமும் மன உறுதியும் உண்டாகும்

முள்ளியவளை வி. போட்டியில்உரை

மாங்குளம். மே 25

'விளையாட்டால் மன அடக்கம், மன உறுதி உண்டாகும். போட்டி பொறுமை இல்லாது நீங்கும். உடல் உறுதி ஏற்படும். நல்ல பழக்க வழக்கங்கள் உருவாகும்'

முள்ளியவளை கிழக்கு, மேற்கு, வற்றாப்பளை ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளின் கீழ் முள்ளியவளை விளையாட்டுக் கழகம் முள்ளியவளை மத்திய மைதானத்தில் அண்மையில் நடத்திய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. கு. முத்துக்குமாரசூரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு இளைப்பாறிய அதிபர் திரு. ச. முத்தையா தலைமை வகித்தார். [க-94]

இளங்கோ இல்லம் சம்பியனானது

வட்டுக்கோட்டை மே 25

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெற்றது.

கல்வி அதிகாரி திரு. ஏ. தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராகப் பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. த. ஜீவரத்தினம் கலந்து கொண்டார்.

பச்சை (இளங்கோ) இல்லம் கூடுதாலான புள்ளிகளைப் பெற்று சம்பியன் இல்லமானது. (ச)



தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம்

வடமராட்சி, மே 25

வல்வெட்டி தர்மகுலசிங்க சனசமூகநிலையத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

தலைவர்;- கோபால் துரைசிங்கம் உப தலைவர்:- தி. கனகரட்ணம் செயலாளர்:- வி. உதயபாஸ்கரன் உப செயலாளர்:- சி. முரளி பொருளாளர்:- கொ. சிவராசா

திருவாளர்கள் க. வாசு, செ. செல்வரத்தினம், இ.இராசதுரை, அ. சத்தியநாதன். ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். [illegible]

பிரான்ஸின் இலங்கைத் தூதர்

கொழும்பு' மே 25

பிரான்ஸுக்கான அடுத்த இலங்கைத்தூதராக டாக்டர் ஆனந்த குருகே நியமிக்கப் படுவார் என்று தெரிகிறது.

தற்சமயம் பாரிஸில் இலங்கைத் தூதராக பணிபுரியும் மத்திய வங்கியின் முன்னாள் கவர்னர் டாக்டர் வர்னசேன ராசபுத்ரம் சுவிற்சர்லாந்துக்கு இடமாற்றம் செய்யப்படுவார் என்று சொல்லப்படுகிறது.

ஆண்டு விழா

புங்குடுதீவு, மே 25

புங்குடுதீவு மண்காடு கிராமோதய நிலையத்தில் புங்குடுதீவு திருக்குடும்ப மாதர் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கத்தின் 33 ஆம் ஆண்டுவிழா தலைவர்; திருமதி வஸ்தியான் விக்ரோரியா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சமாசத்தலைவர் திரு. ச.ஞானப்பிரகாசம் கலந்து கொண்டார். மாவட்டச் செயலாளர் திரு. த. நந்தகுமாரன், புங்குடுதீவு கூ.அ. உத்தியோகத்தர் ஜனுப் எஸ். எம். சுபைர், டாக்டர். கே. இராசரெட்ணம், திரு. வெ. செபமாலை உட்பட பலர் உரையாற்றினர்கள்.

செயலாளரின் வருடாந்த அறிக்கையைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருமதி ஞா இராஜேஸ்வரி நன்றியுரைகூறினர். (க-131)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி சின்னப்பு கனகம்மா

தோற்றம்: 25-08-1918
மறைவு: 25-04-1989

[முன்னாள் ஓய்வு பெற்ற ஊழியர்,
கைதடி வயோதிபர் இல்லம்]

எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திஅடையத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.

மரணச்சடங்கின்போது. ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். 25-05-1989 இன்று வியாழக்கிழமை நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றூர், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

198/9, பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
[illegible]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

பி. தர்மசீலன் (நேசன்)

தோற்றம்: 1969 - 05 - 25
மறைவு: 1989 - 04 - 25

எங்கள் குடும்பத்துக்கு முதன் முதலாய்
வந்துதித்த பாசப்பறவையே!
எங்கள் நெஞ்சமெல்லாம் தீராத ஏக்கத்தை
விதைத்துவிட்டுச் சென்ற ஒளிவிளக்கே!
நொடிப்பொழுதிலே ஓடி மறைந்து விட்டாயே
சுடர்விளக்கே! பிஞ்சாய் உதிர்ந்தாயே!

உங்கள் அன்பால் வாடும்
அம்மா, அப்பா, தங்கை, தம்பிமார், மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அம்மம்மா, அப்பப்பா, உற்றூர், உறவினர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய வேண்டி பிரார்த்திக்கிறோம்.

— குடும்பத்தினர்.

கனகராயன்குளம்,
வவுனியா.

(சி/2653)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி ஜெயபவானி சித்திவிநயகம்

மலர்வு: 30- 03- 1963
உதிர்வு: 04- 06- 1988
திதி: 25- 05- 1989

கல்வியில் சிறந்த கற்புக்கரசியாகவும் கலைகளை வளர்த்திடும் கலைமகளாகவும் புன்னகை பூத்திடும் முகமகளாகவும் முயற்சியில் சிறந்த நாமகளாகவும் எம்முடன் வளர்ந்து ஈடுகொடுக்க முடியாத இழப்பை ஏற்படுத்திவிட்டுச் சென்று விட்டீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள்.

மயிலிட்டி,
காங்கேசன் துறை.

[638]

---

31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிரியையும்

அமரர் கார்த்திகேசு சின்னத்துரை

மலர்வு: 12 - 06 - 1921
உதிர்வு: 25 - 04 - 1989

அன்பும் பண்பும் நேர்மை கடமை அனைத்திலும் சிறந்து விளங்கிய எங்கள் தெய்வமே! எம்குடும்பத்தின் குலவிளக்கே! ஆருத்துயரில் நாம் தவிக்க மீளாத்துயில் கொள்ள வைத்தானே காலன்? எத்தனை வருடங்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மனதில் என்றும் பசுமையே. 25 - 05 - 89 அன்று அன்னார் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகளில் கலந்து அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு உற்றூர், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

[668]

பொய்யாமொழி

குறள்:

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.

பொருள்:

குறைந்த அளவு இன்னதென்று அறிந்து உண்பவனிடத்தில் இன்பம் நிலை நிற்பது போல், மிகப்பெரிதும் உண்பவனிடத்தில் நோய் நிற்கும்.

உதயன்
[illegible]

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்: தொலைபேசி 24805
22073
25 - 05 - 1989 த. பெ. இல: 28

மீண்டும் எண்ணெய் ஆய்வு

வட பகுதிக் கடலோரத்தில் மீண்டும் எண்ணெய் வள ஆய்வு நடக்கப் போகிறது. வடமராட்சியில் இருந்து மேற்குக் கரையோரமாக மன்னார்க் குடாவரை உள்ள பிரதேசத்தில் பெற்றோலியம் எண்ணெய் வளம் உண்டா என்பது குறித்து ஆய்வுகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாம். ஆய்வு வேலைகளுக்கான ஒப்பந்தங்கள் அடுத்த வாரத்தில் கைச்சாத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னார் கடற்கரைப் பிரதேசத்தில் எண்ணெய் வளம் உண்டா என்பது குறித்து முன்னர் ஆய்வுகள் நடத்தப்பட்டதையும், அது குறித்துப் பெரும் ஆரவாரம் செய்யப்பட்டதையும் மறந்து விடுவதற்கு இல்லை.

அக்காலத்தில் பதவியில் இருந்த அரசாங்கம், விரைவில் வரவிருந்த பொதுத்தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு, மன்னாரில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாக அறிவித்ததும், காட்சி காட்டியதும் இலகுவில் மக்கள் மனதை விட்டு அகல முடியாத வித்தைகள்.

அது வெறும் புஷ்வாணம் என்பதும், செப்படி வித்தை என்பதும் பின்னர் எல்லோருக்குமே புரிந்தது. அதனாலோ என்னவோ குறிப்பிட்ட அரசு மாறியபிறகு, புதிதாக வந்த அரசு மன்னாரில் எண்ணெய் வள ஆய்வு நடத்த அக்கறை காட்டாது விட்டுவிட்டது.

இப்போது பெற்றோலியம் கூட்டுத்தாபனம், வட பகுதியில் என்று மட்டுமில்லாது, இலங்கைத் தீவினைச் சூழ உள்ள கடற் பிரதேசம் முழுவதிலும் ஆய்வினை மேற்கொள்ள முடிவு செய்திருக்கிறது.

இன்றைய வாழ்க்கைத் தேவைகளில் பெற்றோலியம் எரிபொருள்கள் பிரதான அத்தியாவசியப் பொருள்களாகி விட்டன. விவசாயம், போக்குவரத்து, கைத்தொழில் போன்ற துறைகளின் மிக அடிப்படைத் தேவைகளில் முக்கியமானவை ஆகிவிட்டன. எரிபொருளின் விலை உயர்ந்தால், உணவுப் பொருளின் விலையும் ஏறும், உடுபுடைவைகளின் விலையும் உயரும் என்ற நிலை.

எண்ணெய் வளம் இல்லாத, கண்டுபிடிக்கப்படாத நாடுகள், ஏன் சொந்த எண்ணெய்க் கிணறுகள் உள்ள சில ஐரோப்பிய நாடுகள் கூட, எரிபொருள் இறக்குமதிக்காகத் தமது செலாவணியில் பெரும் பகுதியை வளைகுடா நாடுகளுக்கு இறைக்கின்றன!

இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் நிலையைச் சொல்ல வேண்டியதில்லை. ஆகையால் நாடுகள் பலவும் தம்மிடம் எண்ணெய் வளம் உண்டா என்று கண்டறிந்து அதனைப் பயன்படுத்த விழைவதில் வியப்பு இல்லை.

ஆசிய நாடுகள், தென் கிழக்காசிய நாடுகள் சிலவும் கூட, தமது எண்ணெய் வளத்தைக் கண்டறிந்து பயன்படுத்துகின்றன. இலங்கைக்கு மிக அருகில் உள்ள இந்தியாவில் எண்ணெய் வளம் தக்கபடி பயன்படுத்தப்படுகிறது. மிகச் சமீபத்தில் கூட அங்கு, தென்இந்தியாவில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டு, பெருமளவில் உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டது.

எனவே, தென் இந்தியக் கடலை அண்டி அதனோடு சேர்ந்திருக்கும் இலங்கையின் வட பகுதிக் கடலில், எண்ணெய் வளம் இருப்பதற்கு நூற்றுக்கு 99 சதவீதமும் வாய்ப்பு உண்டு. ஆகையால் இப் பகுதியில் எண்ணெய் வள ஆய்வுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல் அவசியம். சாத்தியமான இடத்துக்கு முதலிடம் அளிக்காமல், அது தமிழ்ப் பகுதி என்பதால் ஒதுக்கி விட்டு, வேறு பகுதிகளில் ஆய்வுகளை முதலில் மேற்கொள்ள பெற்றோலியம் கூட்டுத் தாபனம் நினைத்துவிடக்கூடாது.

தீவைச் சுற்றிவர ஆய்வு நடத்த இருப்பதால் எல்லா இடங்களிலும், ஒரே நேரத்தில் ஆய்வு வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் எண்ண வேண்டியதில்லை. அதிக சாத்தியமுள்ள வடக்கிலேயே முதலில் ஆரம்பிக்கலாம்.

சிவஞானப் பைரவனே!

திருவண்ணை நகர் தனிலே
திருவுள்ளம் கொண்டவனே,
திருமாலின் மருமகனே
திரு அருளைத் தருபவனே,
சிவனவனின் மூர்த்தத்தில்
சிவனருளாய் நீ நின்று,
சிவனருளைத் தருவாயே
சிவ ஞானப் பைரவனே!

★ ★ ★ ★

யாழ் இந்து வளாகமதில்
யாவருக்கும் நீ பொலிந்தால்,
யாமார்க்கும் அடிபணியோம்
யமனையும் தான் நாம் மதியோம்,
எம்மவர்கள் நா வதனில்
எமையாளும் எம்பெருமான்
நாமமதை நாம் கூறில்
நமக்குண்டோ தாழ்வு இனி?

வண்ணை. சே. சிவராசா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ ஞான வைரவப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகம் பூர்த்தி நாளான இன்று, சங்காபிஷேகம் இடம் பெறுகிறது அதை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகிறது.

சீனாவில் அதிகாரப் போட்டி தீவிரம்; கட்டளையை ஏற்க ராணுவம் மறுப்பு

நாடாளுமன்றத் தலைவர் வாஷிங்டனில் இருந்து விரைவு

பீகிங், மே 24

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் அதிகாரப் போட்டி ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை பிரகடனப்படுத்தப்பட்ட இராணுவச் சட்டத்தை அமுல் நடத்த இராணுவம் தயாராக இல்லாததைத் தொடர்ந்து அதிகாரப் போட்டி தீவிரமடைந்துள்ளதாக பி.பி.சி வானொலி அறிவித்தது.

ஜனநாயக உரிமைகள் கோரி சீன மாணவர் தொடர்ந்து பீகிங் நகரில் தியனன்மன் சதுக்கத்தில் லட்சக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

சீனப் பிரதமர் லீ பெங் கடந்த சனிக்கிழமை இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து மாணவரைக் கலைக்கும்படி உத்தரவிட்டார்.

ஆனால் சீன இராணுவம் பிரதமரின் கட்டளையை ஏற்று இராணுவச்சட்டத்தை அமுல் நடத்த முன்வரவில்லை.

நகருக்குள் இராணுவம் நுழைய மக்கள் தடைபோட்டுள்ளனர்.

இராணுவத்தின் ஒருபகுதி பீகிங் நகருக்கு வெளியே சில தினங்கள் இருந்து விட்டு வாபஸாகியது.

இராஜினாமா கோரிக்கை

இப்போது மாணவரும் மக்களும் பிரதமர் லீபெங் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தி வருகின்றனர்.

சீன அரசுத் தலைமைப் பீடத்தில் லீ பெங்குக்கு ஆதரவு குறைந்து விட்டதாகவும்,

இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருக்கும்முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் சியாங்கியான் பதவிப் போட்டியில் முக்கிய பங்கு பெறுகிறார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

வொங் லீ விரைவு

இதன் மத்தியில் — அமெரிக்கா சென்றிருந்த சீன நாடாளுமன்றத் தலைவரும் அரசியல் குழு உறுப்பினருமான திரு. வொங் லீ தனது பயணத்தை ரத்துச் செய்துவிட்டு பீகிங் திரும்புவதாக அறிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னர் திரு. லீ அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார். இச்சந்திப்பு ஒரு மணித்தியாலம் நீடித்தது.

சீன-சோவியத் உச்சி மாநாடு, சீன மாணவர் கிளர்ச்சி ஆகியன குறித்து திரு.லீ. அதிபர் புஷ்ஷுக்கு விவரித்தார்.

திரு. லீ அவசரமாக பீகிங் திரும்புவதன் நோக்கம் அதிகாரப் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதும், இந்த நிலையில் இராணுவச் சட்டத்தை ரத்துச் செய்யும் பொறுப்பு நாடாளுமன்றத் தலைவர் என்ற முறையில் அவரிடம் உள்ளதுமேயாகும் என்று பி. பி. சி. தெரிவித்தது. (எ)

பலஸ்தீனம் பற்றி அமெரிக்கா

வாஷிங்டன் மே 24

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்கள் பற்றிய பிரச்சினை குறித்து இஸ்ரவேல் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்தியே யாகவேண்டும்.

இப்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேக்கர் இதனைத் தெரிவித்தார். (எ)

✳ காஷ்மீர் பிரச்சினை:

பாக். நோக்கம் பலிக்காது; முதல்வர் பாருக் எச்சரிக்கை!

ஸ்ரீநகர், மே 24

எல்லைப் புறத்தில் சியாசென் பனிப் பிரதேசத்தில் புதிய நிலைகளைக் கைப்பற்ற பாகிஸ்தானை இந்தியப் பாதுகாப்புப் படை அனுமதிக்காது என்று ஜம்மு காஷ்மீர் மாநில முதலமைச்சர் பாரூக் அப்துல்லா தெரிவித்தார்.

வட காஷ்மீரில் ருக்முல்லா என்னும் இடத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பாரூக் அப்துல்லா பேசினார்.

1965, 1971 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற யுத்தங்களில் கிடைத்தபடிப்பினையை பாகிஸ்தான் மறந்துவிடக்கூடாது.

இந்தியாவைப் பலவீனப்படுத்தும் எந்த முயற்சியிலும் பாகிஸ்தான் ஈடுபடக்கூடாது அப்படி ஈடுபடின் அது விரும்பத்தகாத விளைவுகளையே கொண்டு வரும்.

இப்படி அவர் சொன்னார். (எ)

வெளிநாட்டு பயணிகள் வரி அதிகரிப்பு

சென்னை, மே 24

வெளிநாட்டுப் பயணிகள் வரியை இந்தியா வருகிற முதலாம் திகதியில் இருந்து அதிகரிக்கிறது.

அண்டை நாடுகளான இலங்கை உட்பட ஏனைய நாடுகளுக்குச் செல்லும் பயணிகளின் வரி 50 ரூபாவில் இருந்து 150 ரூபாவாகவும்--

சிங்கப்பூருக்கான வெளிநாட்டு பயணிகள் வரி 150 ரூபாவில் இருந்து 300 ரூபாவாகவும் அதிகரிக்கப்படுகிறது. (ஒ-எ)

✳ பாகிஸ்தான் படைகள்

ஆப்கனைப் பிடிக்கும் ஸியாவின் திட்டம் கைவிடப்பட்டது

லண்டன் பத்திரிகை தகவல்

லண்டன், மே 24

ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்கள் வாபஸான உடன் கெரில்லாக்களுடன் சேர்ந்து பாகிஸ்தான் படையினர் காபூலைக் கைப்பற்ற மறைந்த அதிபர் ஸியா-உல் ஹக் திட்டமிட்டிருந்தார் என்று லண்டன் ஒப்சேவர் செய்தி வெளியிட்டது.

1988 ஏப்பிரலில் ஜெனிவா உடன்பாடு ஏற்பட்ட பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் விமான விபத்து ஒன்றில் அதிபர் ஸியா-உல்ஹக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இத்திட்டம் கைவிடப்பட்டது-

ஆனால் பாகிஸ்தானின் பாதுகாப்புக் கமிட்டி ஆப்கன் நிலைமை பற்றி அடிக்கடி ஆராய்ந்து வருகிறது,

இக்கமிட்டியில் ஜனாதிபதி குலம் இஷாக்கான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ, முப்படைகளின் தளபதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

ஜலலாபாத்தை கைப்பற்றும் கெரில்லாக்களின்முயற்சிக்கு பாகிஸ்தான் விமானப் படை பகிரங்கமாக உதவுவது சர்வதேசத்தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் பெனாஸிர் கருதுகிறார்.

கெரில்லாக்கள் வெற்றியீட்டுவதில்தான் பாகிஸ்தானின் பாதுகாப்பு தங்கியிருக்கிறது.

இப்படி லண்டன் ஒப்சேவர் தெரிவித்தது (எ)

✳ 2,000 ஆவது ஆண்டில்

உலகில் சனத்தொகை கூடிய முதல் பத்து நகரங்கள்!

வாஷிங்டன், மே 24

2,000 ஆவது ஆண்டில் உலகின் ஜனத்தொகை கூடிய பத்து நகரங்களில் இரண்டு இந்திய நகரங்களாக இருக்கும் என்று அமெரிக்க பென்டகன் அமைப்பு கணித்துள்ளது.

இதன்படி நியூயோர்க் நகரம் நான்காவதுஇடத்தைப் பெறும்.

1950 – 1975 க்கு இடைப்பட்ட காலத்தில் நியூயோர்க் முதலாவது இடத்தையும், மெக்ஸிகோ நகரம் 3 ஆவது இடத்தையும் பிரேஸில் தலை நகரான சென்பாலோ 6ஆவது இடத்தையும் பெற்றிருந்தன.

2,000 ஆவது ஆண்டில் ஜனத்தொகை கூடிய முதல் பத்து நகரங்களாகக் கணிக்கப்பட்டவற்றின் விவரம் வருமாறு;

மெக்ஸிகோ – 3 கோடி 10 லட்சம்; சென். பாலோ - 2 கோடி 58 லட்சம்; டோக்கியோ - 2 கோடி 42 லட்சம்; நியூயோர்க் - 2 கோடி 28 லட்சம்; ஷங்காய் – 2 கோடி 27 லட்சம்.

பீகிங் - ஒரு கோடி 19 லட்சம்! ரியோ டி ஜெனரோ - ஒரு கோடி 19 லட்சம்; பம்பாய் 1 கோடி 71 லட்சம் கல்கத்தா - ஒரு கோடி 67 லட்சம்; ஜகார்த்தா - ஒரு கோடி 66 லட்சம். (எ)

சோவியத் ஜனாதிபதி தேர்தல் இன்று

மாஸ்கோ, மே 24

சோவியத் யூனியனின் புதிய ஜனாதிபதித் தேர்தல்வியாழன் (நாளை) நடைபெறவுள்ளது.

அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் தெரிவான புதிய மக்கள் காங்கிரஸ் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும்.

கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவின்பெயர் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரே புதிய ஜனாதிபதியாகத்தெரிவு செய்யப்படுவார் என்பது நிச்சயமாகிவிட்டது. (எ)

பாடசாலைகளிலே சமய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்

திருமுறை மாநாடு 2ஆம் நாள்நிகழ்ச்சியில் உரை

யாழ்ப்பாணம், மே 25

பாடசாலைகளில் சமய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஆசிரியர்கள் சமய முறைப்படி ஆசாரசீலர்களாக நடக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் வெறுப்புக் காட்டாமல் சமயக்கல்வியைப் பெறுவார்கள்.

இப்படிக் கூறினார் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் சிவ. சரவணபவான் (சிற்பி).

யாழ்- இந்துக் கல்லூரியில் இந்து மாமன்ற ஆதரவில் நடைபெறும் திருமுறை மாநாட்டில் 2ஆம் நாள் நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

கல்லூரி ஆசிரியர் திரு. சே. சிவராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:-

"பாடத்திட்டத்தில் சமய பாடத்தைக் கொண்டுவரப் பாடுபட்டவர் திரு. க. சி. குலரத்தினம்.

மாணவர் வெறுக்கும் பாடம் சமயம். அவர்கள் வெறுத்தாலும் பிற்காலத்தில் சமயத்தின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர்வார்கள்.

விரும்பாத பாடத்தை எப்படி அவர்களுக்குக் கொடுக்க முடியும். அவர்கள் விரும்பும் வகையில் கொடுக்க வேண்டியது ஆசிரியர்களின் கடமை ஆகும். ஆசிரியர்கள் சமய முறைப்படி நடக்க வேண்டும். சமய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்போது மாணவர்களும் விரும்பிப் படிப்பார்கள்.

இப்படி அவர் கூறினார்.

ஆலயமணி ஆசிரியர் கழகத்துச் சிவானந்தன் [illegible] கூறியதாவது:-

"இன்று திருஞானசம்பந்தரின் குருபூசை நாள். அவருக்கு உமையம்மை ஞானப்பால் கொடுத்தார் ஏன் கொடுத்தார் என்ற விடயம் தான் ஆய்வுக்குரியது.

நாட்டின் நலம் கருதி, சைவநெறி வளரத் தொண்டாற்றவே அவர் ஞானப்பால் கொடுத்தார். அறிவு வர முன்பே ஞானம் பெற்றுவிட்டார்.

அறநெறிப் பாதை

ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர் சமயத்துக்கு, தமிழுக்கு ஆபத்து நேர்ந்த காலகட்டத்தில் புரட்சி செய்தார். அன்று இருந்த நிலைதான் இந்த 20ஆம் நூற்றாண்டில் வந்துள்ளது. ஆகவே அவர் காட்டிய அறநெறிப்பாதையில் இன்று நாம் செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். அவர்கள் தம்புலமை மூலம் சமயப்புரட்சியை ஏற்படுத்திக் காட்டிய வழியில் நாம் செயல்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். சிவவிநாயகமூர்த்தி பேசுகையில் கூறியதாவது:

"இறைவன் இசையில் இன்பம் காணுபவர். எம் அரிய திருமுறைகளை இசையோடு பாடினால் இறைவன் உதவுவார். இறைவனுக்கும் எமக்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்தப் பாலமாக அமைவனவே திருமுறைகள்.

சமயம் எவ்வளவு முக்கியம் என்பதை இன்று இளைஞர்கள் உணர்கிறார்கள். சமயம் தான் எம்மை உலகத்துடன் இணைக்கிறது. இந்து மதத்தின் [illegible] உலகம் [illegible] இன்று உலக அரங்கில் இளைஞர் சக்திதான் ஆட்சிகளைக் கவிழ்ப்பதிலும், ஆதிக்கம் செலுத்துவதிலும் முன்நிற்கின்றது. அதே போல் சைவம் வளர உதவுவதும் இளைஞர் சக்தியில்தான் தங்கியுள்ளது.

மாற்றுச் சமயங்களை வளர்க்க பல ஆக்க திட்டங்களை நடைமுறைப் படுத்துகிறார்கள். அதேபோல் நாம் இயக்கமாக சகல அமைப்புக்களும் இணைந்து செயல்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஆசிரியர் திரு. சே. சிவராசா பேசுகையில் கூறியதாவது:

மத மாற்றத்துக்காக கல்வியைப் பயன் படுத்திய காலகட்டத்தில் நாவலர் போன்றவர்கள் சிறு வித்தாக ஆரம்பித்த இப் பாடசாலை ஈழத் தமிழரின் பெரு விருட்சமாக இன்று வளர்ந்துள்ளது.

திருமுறைகள் தனிப் பாடல்கள் மாத்திரம் அல்ல. அவை வேதமாக விளங்குகின்றன. அரிய திருமுறைகளை ஆலயங்களில் முறைப்படி பாடத் தகுந்தவர்கள் இல்லை? இது நாம் எல்லோரும் வெட்கப்பட வேண்டிய விடயம் ஆகும். திருமுறைகள் முறைப்படி பாட ஆலயங்களில் ஓதுவார் மூர்த்திகள் நியமிக்கப்பட வேண்டும். இதை நாம் நடைமுறைப்படுத்தினால் தமிழில் பூசை செய்ததாகும்.

இப்படி அவர் கூறினார்.

கல்லூரி ஆசிரியர் கழகத் தலைவர் திரு. ஆ. இராஜகோபால் பேசுகையில் கூறியதாவது:

திருமுறைகள் வழிபாட்டை மட்டும் கூறவில்லை. எம்வாழ்க்கைத் தத்துவம், விஞ்ஞான ஆய்வு உட்பட பலதரப்பட்ட பயன்தரு விடயங்களை எடுத்துக் காட்டுகின்றன.

இன்று சகல சமயங்களும் 'நான்' என்பதை அழித்து அன்பு காட்டும்படி போதிக்கின்றன.

'நான்' என்பது எப்போது அழிகிறதோ அப்போதுதான் அன்பு பிறக்கும். அப்போதுதான் சமுதாயம் சிறக்கும்.

இப்படி அவர் கூறினார்.

பண்டிதர், வித்துவான், சைவப் புலவர் திரு. இ. திருநாவுக்கரசு, திரு. க. சி. குலரத்தினம், செல்வன் பா. கேதீஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

யாழ். இந்து மாணவர்களும், யாழ். இந்து மகளிர் மாணவிகளும் திருமுறை இசைத்தனர்.

கல்லூரியின் உப - அதிபர் திரு. பொன் மகேந்திரன் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். (இ-3)

சம்பந்தர் குருபூசை

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மண்டைதீவு தெற்கு கந்தசுவாமி ஆலயத்தில் ஞானசம்பந்தமூர்த்திநாயனார் குருபூசை கழகத் தலைவர் திரு ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

உயர்வகுப்பு மாணவர்களின் சொற்பொழிவுகளும், பண்ணிசையும் இடம் பெற்றன.

செயலாளர் திரு சிவபுரம் சோதி நன்றி கூறினார். (இ)

நிறைவு நாள் விழா

யாழ்ப்பாணம், மே 25

யாழ் இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள சிவஞான வைரவர் கோயிலில் மண்டல முழுக்கு நிறைவு நாள் விழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

திருவருட் செல்வன் சி. செ. சோமசுந்தரத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பிக்கும் இவ் விழாவில் கொக்குவில் இந்து தலைமை அதிபர் திரு. இ. மகேந்திரன் குடமுழுக்கு விழா மலரை வெளியிட்டு வெளியீட்டுரை வழங்குவார்.

இம்மலரின் ஆசிரியர் திரு. கை. க விசாகரத்தினம் பதில் உரை வழங்குவார்.

பிற்பகல் 3மணிக்கு இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் சிறப்புரை வழங்குவார்.

யாழ் இந்து பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. சு. டிவகலாலாவின் நன்றியுரையைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சி இடம் பெறும்.

காலை எட்டு மணி முதல் சங்காபிஷேகம் வைரவப்பெருமானுக்கு இடம்பெறும். [ச]

திருமுறை மாநாடு இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்து இளைஞர் கழகம் நடத்தும் திருமுறை மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் தலைமையில் ஆரம்பமாகும்.

சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா மங்களவிளக்கேற்றி வைக்கத்திரு. கா. மாணிக்கவாசகர் பஞ்சபுராணம்ஓதுவார்.

பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஆசியுரை வழங்க சைவப்புலவர் திரு மு. திருஞானசம்பந்தப்பிள்ளை (அதிபர் யாழ் இந்து கனிஷ்ட வித்தியாலயம்)வாழ்த்துரை வழங்குவார்.

விபுலானந்த இசைக்கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு கே. ஆர். நடராசாவின் பண்ணிசைக் கச்சேரியும் சைவப்புலவர் திரு. பொன் தெய்வேந்திரனின் சங்கீத கதாப் பிரசங்கமும் இடம் பெறும்.

இந்து இளைஞர் கழகத் தலைவர் திரு. சி. க. புண்ணியலிங்கம் நன்றியுரை வழங்குவார். (ச)

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை. யாழ்ப்பாணம்.

உதயன்
25 - 05 - 1989 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடைவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

பொலிஸார் மீது குண்டு வீச்சு

கொழும்பு, மே 25

அனுராதபுரம் நகரசபை விடுதிக்கு எதிரில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலையில் ரோந்து சென்ற பொலிஸார் மீது இனந்தெரியாதோர் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தினர்

இதில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் பொலீஸ் சார்ஜன்ட் ஒருவரும் பலத்த காயமடைந்தனர். (ஒ எ)

கொழும்பில் கோஷ்டி மோதல்

ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு மே 25

கொழும்பு பழைய சோனகத் தெருவில் இடம் பெற்ற கோஷ்டி மோதல் ஒன்றில் குமார் என்ற ஒருவர் கொல்லப்பட்டார்.

கொம்பனித் தெருவைச் சேர்ந்த கோஷ்டி ஒன்றும் புறக்கோட்டையைச் சேர்ந்த கோஷடி ஒன்றுமே மோதிக்கொண்டன.

மோதலின் போது கைக்குண்டுகளும் வீசப்பட்டன.

இம் மோதல் நேற்று முன் தினம் காலை நடைபெற்றது. (ஒ-எ)

கம்பியூட்டர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், மே 25

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் நாளை 26 ஆம் திகதி கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

பயிற்சியில் பங்குபற்றுபவர்கள் இன்று [25 ஆம் திகதி] தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (ஒ-3)

ஒட்டுசுட்டானில் பதற்றம்

ஒட்டுசுட்டான், மே 25

ஒட்டுசுட்டான் இந்தியப் படை முகாமுக்கு அண்மையில் இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

இதே வேளை செவ்வாய் அதிகாலை முகாமிலிருந்து ஷெல் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

இதனை அடுத்து இப் பகுதியில் பதற்றம் நிலவியது. (ஒ-113)

லெபனான்பற்றி எகிப்து ஜனாதிபதி

கெய்ரோ, மே 24

லெபனானில் இருந்து சகல வெளிநாட்டுப் படைகளும் வெளியேற வேண்டும் என்று எகிப்து ஜனாதிபதி ஹுஸ்னி முபாரக் தெரிவித்தார்.

இது சிரியாவுக்கு ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது.

லெபனானில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு சிரியா படைகள் உதவிவருவது தெரிந்ததே. (எ)

சீல் வைத்து வெட்டப்பட்ட இறைச்சியையே உண்ணவேண்டும்

யாழ் மாநகரசபை பொதுமக்களுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், மே 25

''இறைச்சிக்காக கால்நடைகளை வெட்டுதல், விற்பனை செய்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் மாநகர சபை கொல்களத்தில் பரிசோதிக்கப்பட்டு, சீல் வைத்து வெட்டப்படும் இறைச்சியை மட்டும் அங்கீகாரம் பெற்ற இறைச்சிக் கடைகளில் வாங்கி உண்ண வேண்டும்''.

இப்படி ஆலோசனை கூறியுள்ளது யாழ். மாநகர சபை.

இது விடயமாக யாழ்- மாநகர சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''பொது மக்களும், இறைச்சிக்கடை வியாபாரிகளும் காட்டிய ஒத்துழைப்புக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எக்காரணம் கொண்டும் அங்கீகாரம் அற்ற இறைச்சிக் கடைகளிலிருந்து இறைச்சியை வாங்குவதைத் தவிர்த்துக் கொள்ளவும் ஏனெனில், அவை அதிகாரிகளினால் பரிசோதிக்கப்படாதவை.

நோய் வாய்ப்பட்ட கால்நடைகளின் இறைச்சியை அங்கீகாரமற்ற கடைகளில் விற்பனை செய்வதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. இதனால் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படக் கூடாது.

-இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

சம்மாந்துறை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வழங்கப்படும் என்று அமைச்சர் மன்சூர் பிரஜைகள் குழுவினரிடம் உறுதி அளித்தார்.

பேச்சுக்களின்போது அப்பகுதி முஸ்லிம் எம். பிக்கள் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:-

கலவரங்களால் பாதிக்கப்பட்டு 24 ஆயிரம் பேர் அகதிகளாக உள்ளனர். அவர்களில் 20 ஆயிரம் பேர் முஸ்லிம்கள் 4 ஆயிரம் பேர் தமிழர்கள்.

சேதங்கள்

இந்த அகதிகள் 13 முகாம்களில் தங்கி உள்ளனர் 715 வீடுகள் சேதமாக்கப்பட்டன. 10 ஆயிரம் கால் நடைகள் காணாமற் போயுள்ளன.

அதைவிட நூறு ஏக்கர் வரையான தென்னைச் செய்கை தீயிடப்பட்டு, நாசமாக்கப் பட்டுள்ளது. ஏழாயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்– என்று அதில் கூறப்பட்டிருந்தது.

இதேவேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு மாத காலத்துக்கு பங்கீட்டு உணவுப் பொருள்கள் வழங்கவேண்டும் என்றும் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. (அ - இ - ஒ)

யாழ்நகர் இறைச்சி கடைகள் நேற்று திறக்கப்படவில்லை

குருநகர், மே 25

இறைச்சிவிற்பனைக்குநேற்று முதல் அனுமதிவழங்கப்பட்ட போதிலும் யாழ் நகரில் இறைச்சிக்கடைகள் நேற்றுத் திறக்கப்படவில்லை.

யாழ் - மாவட்ட மாட்டு - ஆட்டிறைச்சி வியாபாரிகள் சங்கம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ்- முஸ்லிம் கல்லூரி வீதியில் மேற்படி சங்கப் பொருளாளர் ஜனாப் எம். எல். ஜமால்தீன் இல்லத்தில் கூட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இறைச்சிக்கடைகளை மீண்டும் திறப்பது குறித்து மேற்படி கூட்டத்தில் ஆராயப்படுமென்று தெரியவருகிறது. (இ-51)

பல்கலைக்கழக நிதியத்துக்கு சிங்கப்பூரிலிருந்து ரூ. 3½ லட்சம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ். பல்கலைக் கழகத்தின் உப-வேந்தர் நல நிதியத்துக்கு சிங்கப்பூரில் உள்ள ஒருவர் 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்துள்ளார்,

சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி நிதியத்துக்கு சிங்கப்பூரில் வசிக்கும் எஸ். ஆனந்தகிருஷ்ணன் என்பவரே உதவியுள்ளார்.

பல்கலைக் கழக வளர்ச்சிக்காக அனுப்பும் முதல் தொகை இது என்றும், மேலும் உதவ இருப்பதாகவும் அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். (ஒ-3)

பூரணத்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டாக்டர் அலெக்ஸ், கம்பியூட்டர் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் இது சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுக்களை நடாத்தினர்

கம்பியூட்டர் விஞ்ஞானத் துறையை முழு மட்டத்தில், பூரணத்துவமாக ஏற்படுத்த பிரிட்டிஷ் அரசு உதவும் என்றும், உபகரணங்களை வழங்கும் என்றும்-

இங்கிருந்து விரிவுரையாளர்களை லண்டனுக்கு அழைத்து விஷேட பயிற்சி அளிக்க பிரிட்டிஷ் அரசு முன் வந்துள்ளது என்றும்- உப வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

வெகு விரைவில் கம்பியூட்டர் விஞ்ஞானத்துறை விஸ்தரிக்கப்பட்டு, முழு அளவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். அ-3-10)

அதிகாரப் பரவலில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

படும் சகல நடவடிக்கைகளிலும் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தமிழ்ப்பகுதியில் திட்டவட்டமான நிர்வாகம் ஏற்படுத்தப்படுவதையும், அதிகாரப் பரவலாக்கத்தின்கீழ் உரிய பொறுப்புக்கள் வடக்கு—கிழக்கு மாகாணசபைக்கு வழங்கப்படுவதையும் நிச்சயிக்க நான் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறேன் — என்றார்.

குறிப்பிட்ட சில கூட்டுத்தாபனங்களுடன் வடக்கு — கிழக்கு மாகாணசபை நெருங்கிப் பணியாற்றுவது அவசியம் என்று திரு. வரதராஜப் பெருமாள் பேச்சுவார்த்தைகளின்போது சுட்டிக் காட்டினார்.

நெல் சந்தைப்படுத்தும் சபை, கடற்றொழில் கூட்டுத்தாபனம், மில்க்கோ நிறுவனம் என்பவற்றை அவர் உதாரணமாகக் குறிப்பிட்டார்.

நெல் சாகுபடி செய்வோர், பால்ப்பண்ணையாளர்கள், கடற்றொழிலாளர்கள் ஆகியோர் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு இத்தகைய ஒத்துழைப்பு அவசியமாகும் — என்று அவர் எடுத்துரைத்தார்.

ஜனாதிபதி பிரேமதாச, அமைச்சர் விஜேக்கூனுக்குவிடுத்த பணிப்பில், இத்தகைய தொடர்புகளை ஏற்படுத்தச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் தொடர்புகொண்டு ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டார். (அ எ)

ஜீ சி ஈ..

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் சேர்த்தே வெளியிடுவது என தற்போது முடிவாகியுள்ளது.

இதற்கமைய பரீட்சை முடிவுகள் ஜுன் மாத இறுதியிலேயே வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-9)

மாணவர்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மாணவர்கள் தமது விரிவுரைகளை இன்று பகிஷ்கரிப்பர் என்று ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-16)

சாவகச்சேரி,·-

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடைகளின் கதவுகளில் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன. சுமார் இரண்டு வார காலம் வரை இது நீடிக்கும் எனக் கூறப்படுகிறது.

செவ்வாயன்று கடைகள் பூட்டப்பட்டிருந்த போது பலர் தாக்கப்பட்டதாகவும் சில கடைக் கதவுகளும் சேதப் படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

நேற்றும் சந்தைப்பகுதியில் பதற்ற நிலை நிலவியது. எனினும் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் இருந்தன. (அ-31-117)

இரவில் கேட்ட வேட்டுக்கள்

பச்சிலைப்பள்ளி, மே 25

சாவகச்சேரி நகரப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

இதனால் மக்கள் பீதியுடன் இரவைக் கழித்தனர். (ஒ-11)

முல்லைத்தீவில் அலுவலகம் மீது தாக்குதல்

கொழும்பு, மே 25

முல்லைத்தீவில் இயக்க அலுவலகம் ஒன்றின்மீது நேற்று அதிகாலை சுமார் 4-15 மணி அளவில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இங்கு தகவல் கிடைத்தது.

இதனால் அலுவலகக் கட்டடத்திற்குச் சேதம் ஏற்பட்டது என்றும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சூட்டுச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 25

நேற்று மாலை 6.30 மணியளவில் திருநெல்வேலி, ஆத்திசூடி வீதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரியவந்தது.

கரவெட்டியில் பதற்றம்

கரவெட்டி, மே 25

நேற்றுக் காலை கரவெட்டி, விக்னேஸ்வரா கல்லூரிக்குச் சமீபமாக படையினர் சென்ற சமயம் திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவியது. சில மணி நேரத்தின் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இதே வேளை பாடசாலை வீதியில் சைக்கிள் ஒன்று நொருக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. (ஒ-70)

பெருங்குளத்தில் தேடுதல்

சாவகச்சேரி, மே 25

சாவகச்சேரி, பெருங்குளம் பகுதியில் நேற்றுத் தேடுதல் இடம்பெற்றது.

எவரும் கைது செய்யப்பட்டனரா என்பது குறித்து தெரிய வரவில்லை.

இதேவேளை திங்கட்கிழமை மட்டுவில் பகுதியில் கைதான இளைஞர்கள் அனேகர் செவ்வாய்க்கிழமை மாலையளவில் கனகன்புளியடி முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டனர். (ஒ-31)

செயலகத்துக்கு பதில் அரச அதிபர் சமுகம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் பதில் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்றுச்செயலகத்துக்கு வந்திருந்தார்.

அவர் நேற்று உதவி அரச அதிபர்களுடனும் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

அத்துடன் பொதுமக்கள் பலரின் குறைபாடுகளையும் அவர் கேட்டறிந்து கொண்டார். (ஒ-13)

கிரிக்கெட் வீரர்களுக்கான தடை நீக்கம்

பிரிட்ஜ்டவுன், மே 25

தென் ஆபிரிக்காவுக்கு விஜயம்செய்த மேற்கிந்தியக் கிரிக்கெட் வீரர்கள் மீது விதிக்கப்பட்ட ஆயுள் காலத்தடையை மேற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நீக்கி விட்டது. (ஒ-எ)

கனேடிய அதிகாரிகள் இன்று யாழ் வருவர்

யாழ்ப்பாணம், மே 25

கனேடிய தூதரக அதிகாரிகள் குழு ஒன்று இன்று யாழ் நகருக்கு விஜயம் செய்ய உள்ளது.

இதேவேளையில் 'போரூட்' ஸ்தாபன குழுவினர் சிலரும் இன்று இங்கு வர உள்ளதாக தெரியவந்தது. (ஒ-9)

மரண அறிவித்தல்கள்

காசிப்பிள்ளை பொன்னம்பலம்

நயினாதீவு காசிப்பிள்ளை பொன்னம்பலம் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், இரத்தினம், சோமசுந்தரம் காசிலிங்கம் (நாகபூஷனி டிஸ்பென்சரி உரிமையாளர் முள்ளியவளை), திருமதி புவனேஸ்வரி நடேசபிள்ளை, திருமதி லாடாதேவி வினாயகமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி சிவகாமசுந்தரி, திருமதி சரஸ்வதி, திருமதி அற்புதராணி, நடேசபிள்ளை (அதிபர் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்), வினாயகமூர்த்தி தபாலதிபர் (காத்தான்குடி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25 5-89) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

(11050) தகவல்: சி . நடேசபிள்ளை

திரு. அம்பலவாணர் கணபதிப்பிள்ளை

(Retired Officer, S. H. S. Office)

இணுவில் மேற்கு, திரு. அம்பலவாணர் கணபதிப்பிள்ளை அவர்கள் மேற்கு ஜேர்மனியில் 17-05-1989 அன்று சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் ஜனகம்மாவின் அன்புக் கணவரும், வத்சலா, செந்தில்குமார், குலமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜீவ், கலாதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற திரு. அ. சுப்பிரமணியம், திரு. அ. ஞானதுரை, திருமதி பவளரத்தினம் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலம் சென்ற திருமதி செல்லம்மா சுப்பிரமணியம், திரு. வ திருநாவுக்கரசு, திருமதி இந்திராணி ஞானதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவரின் தகனக்கிரியைகள் 17-05-1989 அன்று மேற்கு ஜேர்மனியில் நடைபெற்றன.

தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

[C/2632] தகவல்: அ. ஞானதுரை

திருமதி தம்பு புவனேஸ்வரி

அனலைதீவு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தம்பு புவனேஸ்வரி 24-05-1989 நேற்றுக் காலை மரணமெய்தினார்.

இவர் காலம்சென்ற சண்முகம் தம்புவின் மனைவியும், ரஞ்சிதமலர், பவானி (ஜேர்மனி), பத்மாவதி திருச்செல்வம் (ஜேர்மனி), ரவீந்திரன், நற்குணராசா (கனடா), சமுத்திரா, மற்றும் விஜி ஆகியோரின் அன்புத் தாயாரும், சச்சிதானந்தம் (கனடா), யோகநாதன், கிருபாமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், வனஜா, வனிதா, லைலா, விசாகன், சுஜி, ஆசா, மற்றும் சுஜாயினி (ஜேர்மனி) ஆகியோரின் பேத்தியும், பாக்கியம், சண்முகநாதன் (சுவிஸ்), பரஞ்சோதி (ஜேர்மனி), கமலாதேவி, மல்லிகாதேவி, இராசேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-05-1989 இன்று மாலை அனலைதீவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றாரும் உறவினரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ரவி
(மகன்)

6-ம் வட்டாரம்,
அனலைதீவு.
[11051]

திரு. வி. எஸ். சின்னத்துரை

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கு முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வி. எஸ். சின்னத்துரை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், திருச்செல்வம் (முரசொலி பிரதம ஆசிரியர்), அருள்மணிதேவி (கமநல சேவை நிலையம், நல்லூர்), தர்மகுலசிங்கம் (கனடா), இந்திராதேவி, சந்திராதேவி (கனடா), கிரிஜாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சிதமலர் (ஆசிரியை ஜோண் பொஸ்கோ), பாலசிங்கம் (அம்பாள் ஸ்டோர்ஸ், கல்முனை), திலகவதி (கனடா), விமலநாதன் (கணக்காளர் முரசொலி), தெய்வேந்திரன் (கனடா), குமாரதாசன் (Philips Trarels) ஆகியோரின் மாமனாரும், அகிலன் (காலம் சென்ற சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்), ஆர்த்தி, அங்கை, அபிதா, வினோத், ஆரூரன், கௌசிக் ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக செம்பாடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
திருமதி. செ. சின்னத்துரை

'திருவருள்'
176, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
முடமாவடி.
(சி/2657)

மரண அறிவித்தல்

திரு. பெரியதம்பி பரராஜசேகரன்

(சமாதான நீதிவானும், மரண விசாரணை அதிகாரியும்)

கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்த பெரியதம்பி பரராஜசேகரன் அகால மரணமானார்.

அன்னார் பெரியதம்பி தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், சரோஜாதேவியின் அன்புக் கணவரும், கோசலையின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் 25 - 05 - 89 இன்று வியாழக்கிழமை பகல் 12 00 மணிக்கு கனகபுரம் மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பரராஜசேகரன்

33, கன புரம்,
கிளிநொச்சி.
(11052)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இல் உள்ள அச்சகத்தில் 25—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது